# அறிவித்தல்

# ஹஜ் யாத்திரிகர்களை பதிவு செய்தல் - 2026

## ஹஜ் உம்ரா குழு

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இலங்கை ஹஜ் உம்ரா குழுவுடன் இணைந்து 2026 ஆம் ஆண்டு (ஹிஜ்ரி 1447) ஹஜ் கடமையினை நிறைவேற்றுவதற்கு உத்தேசித்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

இதனடிப்படையில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள இணையதளத்தினூடாக (Online மூலம் https://muslimaffairs.info/hajjapplications_26/create) தங்களது பதிவினை 2025.07.03 திகதியிலிருந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். **இதுவரை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து பதிவுகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம்.**

புதிதாக பதிவினை மேற்கொள்பவர்கள் 2026 ஆம் ஆண்டு தமது ஹஜ் பயணத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பதிவுக் கட்டணமாக **மீளளிக்கப்படாத 5000.00** ரூபாவினை **MRCA Hajj, Account no. 2327593 Bank of Ceylon, Hyde Park Branch,** என்ற வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச் சீட்டினை திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து தங்களது ஹஜ் பயணத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**2025ம் ஆண்டு ஹஜ் பயணத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பதிவுக்கட்டணமாக ரூபா 5000.00 இனை செலுத்தி பின்னர் ஹஜ் பயணத்தினை மேற்கொள்ள முடியாமல் போனவர்கள் 2026 ஆம் வருடம் ஹஜ் பயணத்தினை மேற்கொள்ள உத்தேசித்திருப்பின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள இணையதளத்தினூடாக (Online மூலம் https://muslimaffairs.info/hajjapplications_26/create)) பதிவினை மேற்கொள்ளுமாறும் பதிவுக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம். இவர்களுக்கு 2026 வருடம் ஹஜ் பயணத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 0112667901 தொலைபேசி இலக்கத்தினூடாக ஹஜ் பிரிவை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**எம்.எஸ்.எம். நவாஸ்**
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்

**எம். ரியாஸ் மிஹுலார்**
தலைவர்
இலங்கை ஹஜ் உம்ரா கமிட்டி

இல. 180, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு -10
தொலைபேசி : 0112667909 / 0112667901
இணையதளம் : www.muslimaffairs.gov.lk